*(வலைபின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1999 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, கைத்தொழில் பாதுகாப்பு தாபனம் (இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டம்.

---

*(1999 திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*1999, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, கைத்தொழில் பாதுகாப்பு தாபனம் (இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.–ஓ.15/97.*

## கைத்தொழில் பாதுகாப்பு தாபனம் (இலங்கை) யைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*"கைத்தொழில் பாதுகாப்பு தாபனம் (இலங்கை)" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான தாபனமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட தாபனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் :* முன்னுரை.

*அத்துடன், சொல்லப்பட்ட தாபனமானது, எக்குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதன் முன்னர் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டுநடாத்தி வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப் பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–*

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, கைத் தொழில் பாதுகாப்பு தாபனம் (இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கைத்தொழில் பாதுகாப்பு ஸ்தாபனம் (இலங்கை) இல் தற்போதைய உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கைத்தொழில் பாதுகாப்பு ஸ்தாபனம் (இலங்கை)" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழி உரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு, அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்த வும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும், முழுத்தத்துவமும், அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். கைத்தொழில் பாதுகாப்பு ஸ்தாபனம் (இலங்கை) யைக் கூட்டிணைத்தல்.

H - 022545

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் எப்பொதுக் குறிக்கோளுக்காக அமைக்கப்பட்டுள்ளதோ, அவை பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன :-

(அ) கைத்தொழில் தாபனங்கள் மற்றும் வர்த்தக தாபனங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் அறிவையும் உயர்தொழில் பழக்கத்தையும் மேம்படுத்தி ஊக்குவித்தல்;

(ஆ) இத்தொழிலில் அங்கத்தவர்களாக இருக்கும் எல்லா உறுப்பினர்களுக்கிடையிலும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் கைத்தொழில் மற்றும் வர்த்தக தாபனங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் அத்துடன் அதிக பயனுள்ளதாக்குதல் ;

(இ) கருத்து, அறிவு மற்றும் அனுபவ பரிமாற்றத்தை வசதிசெய்யும் நோக்கத்துடன் இதேபோன்ற நோக்கத்துடன் வேறு குழுக்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல் ;

(ஈ) கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கு ஒழுக்க மற்றும் உயர்தொழில் நியமங்களை வகுத்து, ஊக்குவித்து வளர்த்தல் அத்துடன் அதை மேம்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான, உசிதமாகக் கூடிய வாறான அத்தகைய நடவடிக்கைகளையும் எடுத்தல் ;

(உ) பாதுகாப்புத் தொழிலின் நன்மைக்காகவும் மேம் பாட்டுக்காகவும் தகவல் கருத்துக்கள், வழிமுறைகள் மற்றும் நுட்பங்கள் ஆகியவற்றைச் சேகரித்தல் ஒத்துப்பார்த்தல், ஒருங்கிணைத்தல் அத்துடன் விநியோகித்தல் ;

(ஊ) பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் மீதான கலத்துரையாடல், ஆய்வு மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை வளர்த்தல், ஆதரித்தல், மேம்படுத்தல், ஊக்குவித்தல் அத்துடன் இவற்றுக்கு வசதிசெய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

*4.* இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத் தக்கவாறான எத்தன்மையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்யவும் புரியவும் நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும். பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், பணியாட் களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய விதிகளுக்கு இணங்க தெரிவுசெய்யப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்ட செயற்குழுவொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது செயற்குழுவானது, இச்சட்டம் தொடங்கும் நாளுக்கு முந்திய நாளன்று தாபனத்தின் செயற்குழுவில் பதவிவகிக்கும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** *(1)* கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டம் எதிலும் சமுக மளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு, விலக்குவதற்கு அல்லது வெளியேற்றுவதற்கும் பதவி தாங்குநர்களையும் நிறைவேற்றுக் குழுவையும் தெரிவு செய்வதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் செயற்குழுவினது பல்வேறு அலுவலர்களது, முகவர்களது அத்துடன் சேவையாளர்களது கடமைகள் புரியப்படு வதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தினதும் செயற்குழுவின

தும் கூட்டங்களில் அலுவல்களைக் கையாளும் நடவடிக்கை முறை அத்துடன் அதன் அலுவல்களை வேறு வகையாகப் பொதுவில் முகாமை செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத அத்தகைய விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குவது கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதே போன்றதோர் கூட்டத்தில் அதேபோன்ற முறையில் மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம், அது திருத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று, வலுவிலிருக்கும் தாபனத்தின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இல்லாதிருக்கும் அளவுக்கு இப் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகள் எனக் கருதப்படல் வேண்டும்.

*அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.*

**7.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவின், மானியக்கொடையின், கொடையின், இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப்பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

*ஸ்தாபனத்தின் தனிசுகள் முதலியன.*

**8.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று தாபனத்துக்கு இருக்கின்ற எல்லாத் தனிசுகளும் பொறுப்பு களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக்கப்படுதல் வேண்டும்

என்பதுடன் தாபனத்துக்கு அந்நாளன்று வருமதியான எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, செயற்குழுவின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலன்றி எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது, அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும். *கணக்காய்வும் கணக்குகளும்.*

(ஆ) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது

சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கலைக்கப்பட்டதன் மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.

**11**. கூட்டுத்தாபனம் கலைக்க்பபட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யபபட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவையுமான வேறு கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது அல்லது நிறுவனங்களானவை, கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றைய யோரினதும் உரிமைகளைப் பேணல்.

**12**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரச அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது அல்லது வேறு எவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்களினால், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*